மலர்: 27 | இதழ்: 09 | செப்டம்பர் 2026
Volume :27 | Issue : 09 | September 2026
தமிழ் மாத இதழ் | தனிப்பிரதி ரூ.20/
Tamil Monthly | Per copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
VALARUM VINNARASU

# ...யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்...

ஏசாயா 6:8.



இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
INDIA CHURCH GROWTH MISSION



கிறிஸ்துவுக்குள் பிரியமான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

"நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி.11:30) என்று சாலொமோன் ஞானி கூறுகிறார்.

மேற்கண்ட வசனத்தின்படி, நீதிமானுக்குக் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதம் ஜீவவிருட்சம். ஆனால், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானமுள்ள மனிதன்.

தேவனுடைய பெரிதான கிருபையினாலே, ஆகஸ்ட் 8,9 ஆகிய தேதிகளில் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் பொதுக்குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. பொதுச்சேவகராக நான் பொறுப்பேற்றபின் நடைபெற்ற முதலாவது கூட்டம். இரண்டு புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

ஊழிய வளர்ச்சி குறித்து அதிகமாக கலந்து ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தாங்பாவும் (வடஇந்திய பணித்தள ஒருங்கிணைப்பாளர்), நானும் இணைந்து ஆகஸ்ட் 11 முதல் 13 வரை கன்னியாகுமரி மாவட்டத்தில், புலம்பெயர்ந்த வடஇந்திய மக்களிடம் நடைபெறும் ஊழியங்களை பார்வையிட சென்றிருந்தோம்.

கூடங்குளம் பகுதியில் 50000க்கும் மேற்பட்ட வடஇந்திய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நடுவில்

தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...




பொதுக்குழுவில் கலந்து கொண்டவர்கள்



புலம்பெயர்ந்த மக்களின் ஜெபக்கூடுகை



புலம்பெயர்ந்த மக்களின் ஜெபக்கூடுகை



கிறிஸ்தவ வியாபாரிகள் ஜெபக்குழுவில் பொதுச்சேவகர் செய்தியளித்தபோது...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு. G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்
திருமதி. செல்வ டேனி சாலமோன்
திருமதி. ஜெனிபர் ரவிக்குமார்


இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| துதித்து மன்றாடுவோம்! | 07 |
| ஆகஸ்ட் மாத வேத விடைகள் | 14 |
| சரியான விடை எழுதியவர்கள் | 20 |
| வேத வினாக்கள் | 21 |
| நடப்புச் செய்திகள் | 22 |



ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு


நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) துதி-ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.


ICGM
58/1 முத்தாலம்மன் கோயில் தெரு,
சேலையூர், சென்னை- 600 073.
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com



வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235


# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

## தரிசனம்:

(Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள **திருச்சபைகள்.**

## வேத ஆதாரம்:

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கும் முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்."

(வெளி.7:9)

## செயல் திட்டம்:

(Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, **நற்செய்தியைப் பிரசங்கித்து,** அவர்களை **சீடர்களாக்கி,** சாட்சியுள்ள சுயசார்புள்ள **திருச்சபைகளை** உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

## வேத ஆதாரம்:

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

(மத்தேயு 28:19-20)



கொடுத்து.




# யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்...

**முன்னுரை:**

ஏசாயா 6ஆம் அதிகாரம், ஏசாயா தீர்க்கதரிசியின் ஊழிய அழைப்பைப் பதிவு செய்கிறது. இராஜாவாகிய உசியா இறந்த காலத்தில், தேசத்தில் நிலையற்ற அரசியல் சூழல் இருந்தது. ஆனால், பூமியின் இராஜா இறந்தாலும், பரலோகத்தின் இராஜாவாகிய தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் காட்சியை ஏசாயா தரிசித்தார். இந்த அனுபவம் அவரது வாழ்க்கையை முழுமையாக மாற்றியது.

**1. தேவனின் மகிமையான தரிசனம்:**

(ஏசாயா 6:1-4)

உசியா யூதாவின் இராஜாவாக நீண்ட காலம் ஆட்சி செய்தார். அவரது காலத்தில் யூதா இராணுவத்திலும், பொருளாதாரத்திலும் வலிமை பெற்றது. ஆனால், அவரது இறுதி நாட்களில், அவர் தேவனுடைய கட்டளையை மீறி, ஆசாரியர்கள் செய்ய வேண்டிய பணியைத் தாமே செய்ய முயன்றதால், தண்டிக்கப்பட்டார்.(2 நாளா.26:16-21).

அவர் இறந்த காலத்தில், அரசியல் குழப்பமும், எதிர்காலத்தைக் குறித்த அச்சமும் நாட்டில் பெரும் பிரச்சனையாக உருவெடுத்தது.

இந்த வேளையில்தான், ஏசாயாவுக்கு தரிசனம் கிடைத்தது. "தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்."(சங்.47:8)

தேவன் உயர்ந்த சிங்காசனத்தில் அமர்ந்திருந்து, உலகம் முழுவதையும் ஆளுகிறவராக என்றென்றும் இருக்கிறார். அவரது வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிரம்பியிருந்தது. சேராபீன்கள் "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று துதித்தனர். தேவனுடைய மகிமையால் தேவாலயம் நிறைந்தது. சூழ்நிலைகள் மாறினாலும், தேவன் மாறுவதில்லை. அவர் எப்பொழுதும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்.

**2. தன் பாவத்தை உணர்ந்த ஏசாயா:**

(ஏசாயா 6:5).

தேவனுடைய பரிசுத்தத்தைப் பார்த்தவுடன் ஏசாயா தன்னுடைய நிலையை உணர்ந்தார். "...ஐயோ! அதமானேன்; நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்... அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறேன்..." என்று கூறுகிறார்.

அவர் தன்னுடைய பாவத்தை மட்டும் காணாமல், தான் சார்ந்துள்ள யூதா ஜனங்களின் பாவத்தையும் காண்கிறார்.

பேதுரு, இயேசுவின் வல்லமையைப் பார்த்தபோது, "...ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்..." (லூக்காக 5:8) என்று கூறினார்.

தேவனுடைய சந்நிதியில் நம்மை ஆராயும்போதும், தேவனுடைய பரிசுத்தத்தை நாம் காணும்போதும் மட்டுமே, நம்முடைய குறைபாடுகளையும், பாவத்தையும் உணர்கிறோம். உண்மையான எழுப்புதல் என்பது, மனந்திரும்புதலிலிருந்தே தொடங்குகிறது.

**3. தேவனின் சுத்திகரிப்பு:** (ஏசாயா 6:6-7)

ஒரு சேராபீன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தணலை எடுத்துக் கொண்டு

வந்து, ஏசாயாவின் உதடுகளைத் தொட்டு, "...இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால், உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது..." என்று கூறினார்.

பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத்தணலினாலே, உதடுகள் சுத்திகரிக்கப்பட்டன. பாவம் நீக்கப்பட்டு, குற்றம் மன்னிக்கப்பட்டது.

தேவனுடைய தரிசனம்-பாவ உணர்வு- சுத்திகரிப்பு- ஊழியத்திற்காக ஆயத்தம். இவையே ஒரு மனிதனை தேவன் ஊழியத்திற்கு அழைக்கும் முறையாக ஏசாயாவில் காண்கிறோம்.

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோவான் 1:7) என்று அப்.யோவான் கூறுகிறார்.

ஒரு மனிதன் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும்போது, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவ ஊழியத்தைச் செய்யும் சீடனாக மாறுகிறார்.

தேவன் ஊழியத்திற்கு அழைப்பதற்கு முன் சுத்திகரிக்கிறார். சுத்திகரிக்கப்பட்டவர்களையே பயன்படுத்துகிறார்.

**4. தேவனின் அழைப்பும்-மனிதனின் பதிலும்:** (ஏசாயா 6:8)

"... யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்..." என்ற தேவனுடைய குரலை ஏசாயா கேட்கிறார்.

"இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" இது ஏசாயாவின் அர்ப்பணிப்பின் பதில். இன்றைக்கும் இப்படிப்பட்ட அர்ப்பணிப்போடுள்ள மனிதர்களைத் தேவன் தேடுகிறார்.

"...இதோ, நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்" என்று கூறும் அர்ப்பணிப்புள்ள வாலிபர்கள் தேவனுடைய ஊழியத்திற்குத் தேவை.

"...கர்த்தர்... சாமுவேலே என்று கூப்பிட்டார். அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன்." (1 சாமுவேல் 3:10) என்று கூறியது போல, தேவசத்தம் கேட்டு, அவரது சித்தத்தின்படி செய்ய, முழு மனதோடு தங்களை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருவரையும் வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்துகிறார்.

வில்லியம் கேரி ஒரு சாதாரண செருப்பு தைக்கும் தொழிலாளி. ஆனால், தேவனுடைய அழைப்பைக் கேட்டபோது, "நான் செல்வேன்" என்று பதிலளித்தார். இந்தியாவிற்கு வந்து நற்செய்தியை அறிவித்தார். வேதாகமத்தை பல இந்திய மொழிகளில் மொழி பெயர்த்தார். இன்று அவர் "இந்திய நவீன மிஷன்களின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

தேவனின் அழைப்புக்கு "ஆம்" என்று சொல்லும் மனிதனால், ஒரு தேசத்தின் வரலாற்றையே மாற்ற முடியும்.

தரிசனம் -மனந்திரும்புதல்- சுத்திகரிப்பு- தேவ அழைப்பு ஆகியவை தீர்க்கதரிசி ஏசாயாவின் வாழ்க்கையை மாற்றியது.

இன்றும் அந்த அழைப்பின் ஒலி கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

ஆகவே, நாம் நமது வாழ்க்கை, குடும்பம், திருச்சபை, ஊழியம் ஆகிய அனைத்தையும் ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து, "ஆண்டவரே, எங்களை பயன்படுத்தும்" என்று ஜெபிக்கும்போது, தேவன் நம்மை ஆசீர்வதித்து, பலருக்கு ஆசீர்வாதமான வாய்க்காலாக பயன்படுத்துவார்.

"யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்?"

"இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" (ஏசாயா 6:8) என்று கூறும் மக்கள் எழும்புவதற்காக ஜெபிப்போம்- செல்லுவோம்.

ææææ

# ICGM
## வங்கி கணக்கு விபரங்கள்

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 10143136773 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI- 73 |
| IFSC CODE | : | SBIN0007948 |

icgm1014@sbi

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கை

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 11194454531 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | VINAYAGA NAGAR, MADURAI. |
| IFSC CODE | : | SBIN0001479 |

ஆலய கட்டிட நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 926010015545855 |
| AXIS | : | AXIS |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI-73 |
| IFSC CODE | : | UTIB0001181 |

மருத்துவ நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | IRAI ARASU TRUST |
| ACCOUNT NUMBER | : | 10143136762 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | MK UNIVERSITY - MADURAI-21 |
| IFSC CODE | : | SBIN0002235 |

பத்திரிக்கை ஊழியத்திற்காக

icgm1014@sbi

SCAN & PAY

OR

BANK

வங்கி கணக்குகள் மூலமாக

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியோ அல்லது வங்கி கணக்குகள் மூலமாகவோ, உங்கள் காணிக்கைகளை அனுப்பி, அதன் விபரங்களை SMS/whatsapp மூலமாக **94459 24440** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும். | *நன்றி.*

# தமிழ்நாடு

## கள்ளக்குறிச்சி மாவட்டம்

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

**செப்டம்பர்-1**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொட்டப்புத்தூர், வெண்ணியூர், எருக்கம்பட்டு, கெண்டிக்கல், மேல்பாச்சேரி, நாரணம்பட்டி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட தர்மா, சந்தோஷ், கார்த்திக், அழகேசன், அன்பு, ஏழுமலை, உமா, கௌசல்யா, குமார் ஆகியோர் இரட்சிக்கப்பட, கிராம பகுதிகளில் சாலைகள் அமைக்கப்பட, புண்ணியமூர்த்தி, கோமதி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, இளம் வாலிபர்களின் தற்கொலை எண்ணங்கள் மாற ஜெபிப்போம்.

## கடலூர் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு.M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, மனோ குடும்பத்திற்கு தேவன் தந்த குழந்தை பாக்கியத்திற்காக, ஊழியரின் மனைவிக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட காமாட்சி, அம்சவல்லி, சரவணன், அன்பு நிலா, மஞ்சு, கொளஞ்சி, இந்திரா, வர்னகி, வெண்ணிலா, அலமேலு, கிஷோர், வசந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, சுமித்ராவுக்கு அரசு வேலை கிடைக்க, அஜித்குமார், ரமேஷ்பாபுவுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.V. சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, பாரதி கண் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மணிகண்டனுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கலை, ராணி, ராஜ்குமார், தர்ஷினி, ஜெகதீஸ், ரம்யா, தாரணிப்பிரியா ஆகியோர் இரட்சிக்கப்பட, பிரியதர்ஷினிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

# துதித்து மன்றாடுவோம்

## ஈரோடு மாவட்டம்

**செப்டம்பர் -2**

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் - திருமதி.டான்சி**

புதிதாக நற்செய்தி கேட்ட அமுதா, தரண், வீரமணி, லோகநாதன், சோனியா, ராஜதுரை, பவிஷ்குமார், மல்லிகா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். அம்மா நகரில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையம், சானார்புதூர், எலத்தூர், ராகுல் கார்டன், செட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, லீதியாளுக்கு தேவன் தந்த சுகத்திற்காக, சபை விசுவாசிகள், வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கவிதா, கௌதம், அபி, சரண்யா, சாமித்தாய், சாந்தகுமார், வனிதா, பூர்ணிமா, சாமிநாதன் ஆகியோர் இரட்சிக்கப்பட, சாமித்தாய், குப்பாயி ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பூவளபருத்தி, பொன்னாச்சியூர், உப்பிலியனூர், பில்சின்னாம்பாளையம், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, ஆமோசுக்கு சுகம் கிடைத்ததற்காக, சர்ச்சில், ஈசாக்கு ஆகியோர் புதிய தொழில் தொடங்கியதற்காக, வின்சிக்கு நல்ல வரன் அமைந்ததற்காகத் துதிப்போம். சுரேஷ்குமார், நிஷா, புஷ்பா, ராஜீவ், சிவகுமார், இப்ராஹிம் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:** **செப்டம்பர்-3**
**திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தொண்டாமுத்தூர், குறுஞ்சேரி ஆகிய கிராமங்களுக்காக, ஆபிரகாமுக்கு தேவன் தந்த சுகத்திற்காக, பிரேம் குடும்பம் நற்செய்திக்கு ஆர்வம் காட்டியதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட ஜெயம்மாள், ஈஸ்வரி, கருப்புசாமி, பார்கவி, வேலுச்சாமி, முருகாயி, பிரபா, ராமன், முருகேஸ்வரி ஆகியோருக்காக, சஞ்சய், ஜெயக்குமார், வில்லியம்ஸ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சுமதி, கிருபை, ஏஞ்சல் கணவர், ஏஞ்சல் மகன் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, கரட்டுப்பாளையம், தளவாய்பாளையம், பொன்னாண்ட கவுண்டனூர் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. இம்மானுவேல் கிளமெண்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

சீலா, ஜெனிஃபர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, நந்தகுமாருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காக, பிரபு ஆபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஜெகனுக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஊழியரின் தந்தை இம்மானுவேல் சந்திரசேகரனுக்கு தண்டுவட அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

ஸ்வேதா, ராமகிருஷ்ணன் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காக, ஆர்த்திக்கு கிடைத்த கர்ப்பத்தின் கனிக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட ரிதன்யா, சந்திரன், குமார், சுமதி, தங்கம்மாள், மயிலாத்தாள், கோபாலகிருஷ்ணன், சம்பத், தாரணி, மாரியம்மாள், சிவா, ராஜேஷ் ஆகியோர் இரட்சிக்கப்பட, கன்னீஸ்வரி, நடராஜ் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க, கிட்டம்மாளை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்** **செப்டம்பர்-4**

**அருட்பணியாளர்:**
**திரு.S. பால்ராஜ் -திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சக்கல்பட்டி, சின்னமருதூர், கம்பளியம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சாராள், ரவி ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, செந்தில் இரட்சிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். அற்புதா, தமிழ்ச்செல்வி, வளர்மதி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் மனந்திரும்ப, சுசீலா காலில் உள்ள எலும்பு தேய்மானத்திலிருந்து சுகம் பெற, பிச்சக்கல்பட்டியில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, சபையில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் தினமும் 22 பேர் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட தேவி, கிரிநாத், ராஜா, அஸ்வந்த், கிருபா ஆகியோர் இரட்சிக்கப்பட, அருக்காணி, செல்வி, கோமதி, ராஜேந்திரம், பேபி, முருகாத்தாள், ராமச்சந்திரன், அன்பழகன், மனோஜ், மைனா, முருகேசன், மகிமா ஆகியோர் மீண்டும் சபை ஐக்கியத்தில் இணைந்திட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

கமலா தொண்டைக் கட்டியிலிருந்து சுகம் பெற்று பேசுவதற்காக, டெல்சியா இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, கோதாவரி -பார்த்திபன் திருமணம் நடைபெற்றதற்காக, வீரா, வடிவேல், வள்ளி, புவனா ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். திருமாத்தாள் கால் எலும்புக் கட்டியிலிருந்து சுகம் பெற, ஆலயச் சுற்றுச் சுவர் கட்டும் பணி விரைவாக முடிவடைய, பாக்கியலட்சுமி, கோபால், பாப்பம்மாள் ஆகியோர் மனநோயிலிருந்து சுகம் பெற, ஊழியரின் மனைவிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்** **செப்டம்பர்-5**

**அருட்பணியாளர் :**
**திரு. பிரவீன்குமார்-திருமதி. மீனா**

புஷ்பம் சுகம் பெற்றதற்காக, நற்செய்தி

கேட்ட ராஜேந்திரன் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, செல்வராஜ், ராஜா, முத்து ஆகியோர் நற்செய்தி கேட்டதற்காகத் துதிப்போம். ஸ்டாலினுக்கு வேலை கிடைக்க-குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சாந்தி மகனுக்கு நிரந்தர வேலை கிடைக்க-திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் - திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழக்குறிச்சி, மேலக்கற்கண்டார் கோட்டை, கீழக்கற்கண்டார் கோட்டை, மலை அடிவாரம், மாவடிகுளம், நத்தமாரிப்பட்டி போன்ற பகுதிகளுக்காக, குமார் இருதய நோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காக, பிரபாகரனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைத்ததற்காகத் துதிப்போம். கணேசனுக்கு (மூளை பாதிக்கப்பட்டு கண் வாய் ஆகியவை செயலிழந்து விட்டது) அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட் திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், பெரிய வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி, வடக்கம்பட்டி காலனி ஆகிய கிராமங்களுக்காக, தங்கமாயன், கார்த்திகா ஆகியோருடைய இடப்பிரச்சனை சமாதானமாக முடிவடைந்ததற்காக, புஷ்பம், ரஞ்சனியின் குழந்தை ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட அம்மாவாசி, முனியாண்டி, அழகம்மாள், தெய்வம், மணிமேகலை, மரிய செல்வி, பஞ்சவர்ணம், ராமாயி, கலைமணி, சிவா குடும்பம் ஆகியோர் இரட்சிக்கப்பட, சபையின் இடப்பிரச்சனை சமாதானமாக முடிவடைய ஜெபிப்போம்.

**செப்டம்பர் -6**

**அருட்பணியாளர் :**

**திரு.S. சாமுவேல்-திருமதி. ரோகிணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேட்டுப்பெருமாள் நகர், T. வாடிப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஜெயாவுக்கு தேவன் தந்த சுகத்திற்காக, வனிதாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட திருமூர்த்தி, வைத்தியநாதன், ஜெயா, செல்வி, முருகன் ஆகியோர் இரட்சிக்கப்பட, செல்வி, மூர்த்தி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, பிரியா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்**

டெய்ஸி அம்மா, பாப்பாத்தியம்மா ஆகியோர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, குமார் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மணிமேகலை சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பிரகாஷ் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, முத்து கண்ணன் இரட்சிக்கப்பட, குமாருக்கு விபத்தினால் ஏற்பட்ட கால் முறிவிலிருந்து நிறைவான சுகம் கிடைக்க, ஜேம்ஸ் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, மலர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க-இரட்சிக்கப்பட, கருப்பசாமி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஆலய கட்டிடப் பணிகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குச்சம்பட்டி, கண்ணாபட்டி, கோபாலபுரம், சத்திரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, துரைராஜ், சரவணன் ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பாண்டியம்மாள், வசந்த், கௌதம், முகேஷ், மாதேஷ், மதன்பாண்டி, யோகேஷ், லீலாதேவி, கலைச்செல்வி, சுகந்த் ஆகியோர் இரட்சிக்கப்பட, டேவிட் முருகன் வீடு கட்டி முடிக்கப்பட, கஸ்தூரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பீட்டர்,சாம், அம்பிகா, மோனிஷா, அஜித், சரண்யா, நல்லம்மா, முத்தையா, அழகுத்தாய், சாமுவேல் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

**அருட்பணியாளர் :**

**திரு.P. ராஜா-திருமதி. அன்னாள்**

புதிதாக நற்செய்தி கேட்ட காயத்ரி, சுகுணா, ஜெயப்பிரியா, பத்மாவதி, ராஜேஸ்வரி ஆகியோருக்காக, அழகர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். அழகரின் மனைவி பார்வதி இரட்சிக்கப்பட, ஆனந்தி, ஸ்வேதா, ராதா ஆகியோருக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**செப்டம்பர்-7**

**அருட்பணியாளர் :**

**திரு. காளிமுத்து-திருமதி. குமுதா**

புதிதாக நற்செய்தி கேட்ட குமார், மகாராணி, பசுபதி, முத்துமாரி, முருகேஸ்வரி,

மாரிசாமி, பெருமாயி, ஒச்சு, அய்யம்மா ஆகியோருக்காக, சபையில் நடைபெற்ற உபவாச மற்றும் ஜெப கூடுகைக்காகத் துதிப்போம். ராம்குமாருக்கு திருமணம் நடைபெற, முத்துமாரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, அய்யம்மா ஆலயம் வர, சந்திராம்மாள் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

யோவான், கருத்தம்மா ஆகியோர் சுகம் பெற்றதற்காக, குமாருக்கு கிடைத்த வேலைக்காகத் துதிப்போம். கனியம்மாள், விவேகானந்தன் (முதுகு தண்டுவட நோய்), பாண்டியராஜன் (பக்கவாத நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு.M. அகஸ்டின்–திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, கருமாத்தூர், வடக்கம்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஷீலாவுக்கு வேலை கிடைத்ததற்காக, ஹேமா தோல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, சீனித்தாய் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். கோபால், ஜெயந்தி குடும்பம் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்ள, கலைமணி, மேரி, வீரம்மாள் ஆகியோரின் வீடு கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

## செப்டம்பர்-8

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

அகிலாவுக்கு (பத்தாண்டுகளுக்குப் பிறகு) பெண் குழந்தை கிடைத்ததற்காக, ஈஸ்வரன் ஆராதனையில் மீண்டும் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். மாயக்கா மனநோயிலிருந்து சுகம் கிடைக்க, ஒச்சுக்காளை கடன்பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

மணி, சிந்தாமணி ஆகியோர் சுகம் பெற்றதற்காக, ஆனந்தகுமார், முத்துமாலா, தமயந்தி, ரவி, அமுதா ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாக நிற்பதற்காகத் துதிப்போம் கனகராஜ், பழனியம்மா, அமுதா, ரவி, ராமசாமி ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஜான், மணி, ராஜன், அபர்ணா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஐஸ்வர்யாவுக்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க, சினேகா, சரண்யா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஆனந்த குமார் (இடுப்பு வலி), பழனியம்மாள், சந்திரா தேவி, ராமசாமி, உஷா ஆகியோரின் கால் வலியிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.A. பால்ராஜ்–திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பழனி, கலாமணி, ராஜ்குமார், சிலம்பரசன், கனகவல்லி, சுப்பிரமணியம் ஆகியோருக்காக, பிரேமா–தாமரைக்கனி தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, குணாவிற்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். கனகவல்லி கணவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சுப்பிரமணியம் குடும்பம் இரட்சிக்கப்பட–நல்ல வேலை கிடைக்க, சிலம்பரசன் மனைவியோடு மீண்டும் இணைந்து வாழ–இரட்சிக்கப்பட, திலீப் குமார் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## செப்டம்பர் -9

**அருட்பணியாளர் :**
**திரு.G. ஜெகன்–திருமதி. திவ்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உச்சபட்டி, இந்திரா நகர், சிவன் நகர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கண்ணன், சுப்ரஜா, வனமூர்த்தி, செல்வகணபதி ஆகியோருக்காக, கனகவேல், மதியழகன், சந்திரலேகா, வசந்தா, அன்பரசி, சுமதி, சித்ரா, சுந்தரபாண்டியன், கனகவல்லி, மூர்த்தி, செல்வநாயகி, வஜ்ரவேல், செல்வம், திலகவதி ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். கண்ணன் சர்க்கரை நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்–திருமதி. அனிதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களுக்காக,நற்செய்தி கேட்டவர்களுக்காக, பின்தொடர் பணியில் ஆர்வம் காட்டுகிற வாலிபர்களுக்காகத் துதிப்போம். திருச்சபைக்கு வருகிற ஜனங்கள் கடன் பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற, பாரம்பரியம் மற்றும் விக்கிரக

ஆராதனையின் மூலமாக வருகிற எல்லா பாதிப்பிலிருந்தும் விடுதலை பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து-திருமதி. கனியமுது**

ஜோயல், பிரதீபா ஆகியோர் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ராணி அம்மாள் தோட்டம் நல்ல விலைக்கு விற்கப்பட, சாந்தகுமார், சீதாவுக்கு ஏற்ற காலத்தில் திருமணம் நடைபெற-நிரந்தரமான வேலை கிடைக்க, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :** **செப்டம்பர்-10**

**திரு.J. ஜெயகுமார்-திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளபாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, தையல் பயிற்சி கற்றுக் கொண்ட 14 பேருக்காக, வாலிபரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக, மகாலிங்கம், ஜெனி ஆகியோரின் வீட்டில் ஜெபக்குழு நடைபெறுவதற்காகத் துதிப்போம். தையல் கற்றுக்கொள்ளும் மீனா, கௌசிகா, பானு, பேரரசு, முகிலன், ஆகாஷ், அஸ்வின், முத்துராமன்,சாந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஊழியரின் மனைவிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு.P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, வண்டியூர், ராமகிருஷ்ணாபுரம், ராஜக்கல்பட்டி, ராயவேலூர் ஆகிய கிராமங்களுக்காக, சின்னம்மாள், வீரவேல் ஆகியோருக்கு வேலை கிடைத்ததற்காக, சித்ராவுக்கு கிடைத்த கர்ப்பத்தின் கனிக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட குமரன், குணசேகரன், பிச்சைமணி, தங்கராஜ், செல்வம், வேலுச்சாமி, சரவணகுமார், சோபியா, கணேசன், முருகன் ஆகியோர் இரட்சிக்கப்பட, குணசேகரன் விவசாயம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்-திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், தேக்கம்பட்டி, T.மீனாட்சிபுரம், அன்னை இந்திரா நகர் ஆகிய கிராமங்களுக்காக, மனுவேல், மனாசே ஆகியோர் இடம் வாங்கியதற்காக, இனியாவுக்கு தேவன் தந்த சுகத்திற்காக, ராணியை விஷ பூச்சியிடமிருந்து தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கோபி, புவனேஸ்வரி, கந்தசாமி, பிரியா, ராணி, இனியா, கமலேஷ், சுதாகர், சீதாலட்சுமி, பூமிகா, சசிரேகா, மீனா, பாண்டீஸ்வரி, முருகன், தேவப்பிரியன், வீராயி ஆகியோர் இரட்சிக்கப்பட, கோபி, பிரியா, கமலேஷ் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, மீனாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :** **செப்டம்பர் -11**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, கிருபா ஜான்சனுக்கு குழந்தை பிறந்ததற்காக, ரகுபதி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, பிச்சை சுகம் பெற்றதற்காக, மாதவனுக்கு வேலை கிடைத்ததற்காக, கௌசல்யா குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பிச்சை, இருளாயி, கணேஷ், வாசுகி ஆகிய குடும்பங்கள் இரட்சிக்கப்பட, ராஜேந்திரன், மாதேஷ் ஆகியோர் நிறைவான சுகம் பெற, கங்கா மகளுக்கு திருமணம் நடைபெற, கௌசல்யா மகள்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

காவியா கணவரோடு மீண்டும் இணைந்ததற்காக, கருப்பாயி வாலிபர் முகாம் மூலம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். ராஜாமணி குடும்பம் மீண்டும் ஆலயத்திற்கு வர ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வலசை, சிதம்பராபுரம், சிவகாமிபுரம், தோணுகால், சாய மலை, மருதங்கிணறு ஆகிய பகுதிகளுக்காக, முருகேஸ்வரிக்கு (12 வருடங்களுக்குப்பிறகு) இரட்டைக் குழந்தைகள் கிடைத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட சுப்புலட்சுமி, ராதா, கண்மணி, ஜோதி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

கரூர் மாவட்டம்

**அருட்பணியாளர் :** **செப்டம்பர்-12**

**திரு. J. பவுல்ராஜ்- திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரூர், குப்பை மேட்டுப்பட்டி, ஆத்தூர், செல்லரப்பாளையம், பஞ்சமாதேவி, சமத்துவபுரம், ஜெயந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, வீரம்மாள், சதீஷ் ஆகியோரை தேவன் பாதுகாத்ததற்காக, புவனேஸ்வரிக்கு கிடைத்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பழனியம்மாள், கவிதா, சுதா, சந்துரு, மாராயி, குழந்தாயி, ராமாயி, சீரங்காயி, பெரியசாமி, நதியா, கோகிலா, சுப்பிரமணி, ஐயப்பன், ரத்தினம், முத்துகிருஷ்ணன், ரஞ்சித், ஜெயந்தி, தருண், அபிநயா, சரவணன் ஆகியோர் இரட்சிக்கப்பட, கஸ்தூரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஷோபனா, சிந்து ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ரஞ்சித் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

விழுப்புரம் மாவட்டம்

**அருட்பணியாளர் :**

**திரு.D. தங்கராஜ்-திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, பருகம்பட்டு, சிறுத்தனூர், செம்மனேந்தல், குடிமாலக்குப்பம் ஆகிய கிராமங்களுக்காக, கிரேசுக்கு பெண் குழந்தை பிறந்ததற்காக, முனீஸ்வரி, ஆரோக்கியத்தாய் ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். மேரிக்கு சுகம் கிடைக்க, அற்புதராஜுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஹேமாவுக்கு வேலை கிடைக்க, சித்ரா கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), ஊழியர்கள்: திரு.R. பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு.T.S. தெங்கோலுன் ஹோகிப், திரு சின்ஹன் ஷியாம் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**செப்டம்பர்-13**

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, ஆதியாகமம்-நியாயாதிபதிகள் வரை உள்ள புத்தகங்களின் மொழி பெயர்ப்புப் பணி விரைவில் முடிவடைய, சுக்மன் மாத்லாம் (1 & 2 நாளாகமம்), மங்கள்தாய் (நெகேமியா) ஆகியோர் செய்துவரும் மொழி பெயர்ப்புப் பணிக்காக, மொழி பெயர்ப்புப் பணிகள் முடிவடைந்த எஸ்றா, யோனா, ரூத் ஆகிய புத்தகங்கள் பிழைத்திருத்தம் செய்யப்பட ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**செப்டம்பர் -14** வளரும் விண்ணரசு

இம்மாத இதழ் வெளியிடப்பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, வாசகர்கள் விரும்பும்வண்ணம் இதழ் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**செப்டம்பர் -15** **நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Mrs. பிரியா யூஹா, திரு.K. ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு.J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 22 பேருக்காகத் துதிப்போம். லால்மின்தாங், பூர்னுசந்திரா, தெபோரா, ஆல்பா, ராஜ்ராம், சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, சோம்சிங், நெதன்லங், சோந்த்ரோகுமார் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், வடசேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, சுனில் இழந்த வேலையை மீண்டும் பெற்றுக் கொண்டதற்காக, சுப்ரஜா விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, குடியா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சூடன் (கல்லீரல் நோய்), லக்கி (காச நோய்), ராகேஷ் (காது நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, ராகுல், தர்மா, சுனில் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

## ஆறுதலுக்காக ஜெபிப்போம்

# திருமதி. பிரைடா அருள்



சென்னையைச் சேர்ந்த நமது ஆதரவாளரும், Dr. மோகன் சம்பத்குமார் அவர்களின் துணைவியாருமாகிய, Dr. பிரைடா அருள் அவர்கள், ஜுலை 20, 2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில் நற்செய்தி அறிவிக்கும் பணியை ஊக்குவிக்கும்விதமாக, ஊழியர்களையும், ஊழிய நிறுவனங்களையும் ஆதரித்தவர். 30 வருடத்திற்கும் மேலாக ICGM-ன் ஆதரவாளராக இருந்த இவரது மறைவு, இவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல ICGMக்கும் இழப்பாகும். இவரை இழந்துள்ள குடும்பத்தினருக்கு தேவ ஆறுதல் பெருகுவதாக.

## ஆறுதலுக்காக ஜெபிப்போம்

# திருமதி. சரோஜி பாண்டியன்
# 1946-2026



சென்னையைச் சேர்ந்த நமது ஆதரவாளரும், காலஞ்சென்ற திரு. S.D.J. பாண்டியன் அவர்களின் துணைவியாருமாகிய, திருமதி. சரோஜி பாண்டியன் அவர்கள் ஜூன் 20, 2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர், விசுவாசத்திலும் அன்பிலும் கட்டப்பட்ட ஒரு குடும்பத்தில், நான்காவது பிள்ளையாக ஜூலை 17, 1946 அன்று பிறந்தார். ICF (சென்னை) மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி 2002ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். குடும்ப உறவுகளைப் பேணி பாதுகாப்பதில் சிறந்து விளங்கியவர்.

